# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# க.பொ.த (உ/த) வகுப்பு மாதிரிப் பரீட்சை - 2020
# கர்நாடக சங்கீதம்

## தரம் 13

## பகுதி – 01

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. கனபஞ்சக இராகங்களில் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இயற்றியவர்
   1.தியாகராஜஸ்வாமிகள் 2.முத்துத்தாண்டவர் 3.ஸ்வாதித்திருநாள் மகாராஜா
   4.முத்துஸ்வாமிதீட்ஷிதர் 5. சியாமாசாஸ்திரிகள்

2. 1964 இல் சீன ஆக்கிரமிப்பின் போது நாட்டுப்பற்றினால் தனது நகைகள் முழுவதையும் நாட்டு நலனுக்கு வழங்கிய இசைக்கலைஞர்.
   1.MS. சுப்புலட்சுமி 2. M.L.வசந்தகுமாரி 3. சாருமதிராமச்சந்திரன்
   4 D.K. பட்டம்மாள் 5. சுதா ரகுநாதன்

3. மதங்க முனிவரால் கூறப்பட்ட இராகப்பிரிவு
   1.திவிதீயகனபஞ்சகம் 2. சுத்தராகம் 3.சங்கீர்ணராகம்
   4.கனபஞ்சகம் 5. சாயாலகராகம்

4. 23 பண்களில் தேவாரம் அருளிச் சிறப்பிடம் பெற்றவர்
   1.திருஞானசம்பந்தர் 2.நாவுக்கரசர் 3.சுந்தரர்
   4.மாணிக்கவாசகர் 5. அருணகிரிநாதர்

5. மனோதர்ம சங்கீதப் பிரிவுகளுள் தாளத்துடன் பாடப்படாதவை
   1. நிரவல் தானம் 2. இராகம், கற்பனாஸ்வரம் 3. பல்லவி, நிரவல்
   4. இராகம், தானம் 5. தானம், பல்லவி

6. 84 தலங்கள் மீது திருமுறை பாடியவர் யார்?
   1.அப்பர் 2.சுந்தரர் 3.சம்பந்தர் 4.மாணிக்கவாசகர் 5. சேக்கிழார்

7. கிருதியின் ஸ்தாயி எல்லை
   1. 11/2 ஸ்தாயி முதல் 2 ஸ்தாயி வரை
   2. 41/2 ஸ்தாயி முதல்5 ஸ்தாயி வரை
   3. 1 ஸ்தாயி முதல் 2 ஸ்தாயி வரை
   4. 2 ஸ்தாயிமுதல் 4 ஸ்தாயி வரை
   5. 4 ஸ்தாயி முதல் 3 ஸ்தாயி வரை

8. எந்த இடத்தில் ஸ்வரமும், அதே இடத்தில் ஸாகித்தியமும் காணப்படல்
1.ஸ்வராந்தரம் 2.சிட்டைஸ்வரம் 3.மகுடஸ்வரம்
4.ஸ்வராட்சரம் 5.மகுடசாகித்தியம்

9. ஒரு இராகத்தை பாடும்போது இடையிடையே முடியும் ஸ்வரம்
1.அல்பத்துவம் 2.சன்னியாசம் 3.அபன்னியாசம்
4.பகுத்துவம் 5.வின்னியாசம்

10. நிஷ்கள வாத்தியம்
1.புல்லாங்குழல் 2.வீணை 3.கோட்டுவாத்தியம்
4.ஸிதார் 5.கிற்றார்

11. மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ள உருப்படி எது?
1.தேவாரம் 2.திருப்புகழ் 3.திருவாசகம்
4 திருவிசைப்பா 5.திருப்பல்லாண்டு

12. பைரவி ராகத்தின் அன்னியஸ்வரம்
1.சுத்ததைவதம் 2.சதுஸ்ருதிதைவதம் 3.கைசிகிநிஷாதம்
4.காகலிநிஷாதம் 5. சுாதாரணகாந்தாரம்

13. A. ஸகா - ஸமா - ஸபா
B. ஸரி - ரிக - கம - மப
C. ஸநி - நித - தப - பம
D. ஸரிஸதாத ஸரிஸ - பாப
மேலே கொடுக்கப்பட்டுள்ள கமகங்கள் முறையே

1.ஆஹதம், பிரத்தியாகதம், ஆந்தோளிதம், டாலு.
2.பிரத்தியாஹதம், ஆந்தோளிதம், டாலு, ஆஹதம்.
3.டாலு, ஆஹதம், ஆந்தோளிதம், பிரத்தியாஹதம்.
4.டாலு, ஆஹதம், பிரத்தியாஹதம், ஆந்தோளிதம்.
5.ஆஹதம், டாலு, பிரத்தியாகதம், ஆந்தோளிதம்.

14. ஆரோகணத்தையும் அவரோகணத்தையும் இசைக்கும் பொழுது அந்நியஸ்வரத்தை சேர்த்துக்கொள்ள வேண்டிய இராகம்.
1.ஹமீர்கல்யாணி 2.பெஹாக் 3.வசந்தா
4.ஆபோகி 5.ஸ்ரீரஞ்சனி

15. திருவிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழினை இயற்றியவர்
1வ. க. செங்கல்வராயபிள்ளை 2.சுப்பிரமணியபிள்ளை 3. ராவ்பகதூர்சாஸ்திரி
4. வுரகவிமார்க்கசகாயதேவர் 5.அருணகிரிநாதர்

16. 20 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் அதிகளவான தில்லானாக்களை இயற்றி கர்நாடக இசைக்கு அளித்த இசைக்கலைஞர்கள்
1.குன்னக்குடி வைத்தியநாதன், லால்குடி ஜெயராமன்
2.வீணை வரதய்யா, G.N.பாலசுப்பிரமணியம்
3.M.M.தண்டபாணிதேசிகர், லால்குடி ஜெயராமன்
4.பாலமுரளிகிருஷ்ணா, M.M.தண்டபாணிதேசிகர்
5.பாலமுரளிகிருஷ்ணா, லால்குடி ஜெயராமன்

17. தனக்குத்தானே உரையாடிக்கொள்ளும் விதத்தில் அமைந்த தரு
1.உத்தரபிரதியுத்தரதர 2.சம்வாததரு 3.ஸ்வாகதரு
4.ஜக்கினிதரு 5.வர்ணனைத்தரு

18. காகபாதத்திற்குரிய குறியீடு
1. + 2. / 3. * 4. // 5. 0

19. 6" விட்டமும் ½" கனமும் கொண்டமைந்த கட்டையின் ஒரு பக்கத்தில் உடும்புத் தோலால் ஒட்டப்பட்ட கருவி.
1. தபேலா 2. கெஞ்சிரா 3. மிருதங்கம்
4. தவில் 5.உடுக்கு

20. "சங்கீதசம்பிரதாயபிரதர்சினி" என்ற நூலை எழுதியவர்
1. வேங்கடமகி 2. சுாம்பமூர்த்தி 3. சோகிந்தாச்சாரியார்
4. சுப்பராமதீட்சிதர் 5.ஜெயதேவர்

21. வேதமத்திம யதி எனப்படுவது.
1.கோபுச்யதி 2.ஸ்ரோதோவஹயதி 3.டமருயதி
4.சமயதி 5.மிருதங்கஜதி

22. பின்வருவனவற்றில் வெண்பா, விருத்தம், சிந்து, கும்மி, கண்ணி, கீர்த்தனை என்பவற்றை உள்ளடக்கிய பாடல் தொகுதி.
1.நந்தனார் சரித்திரப் பாடல்கள் 2.சர்வசமயசமரசப்பாடல்கள்
3.ஆழகர்குறவஞ்சிநாடகப்பாடல்கள் 4.சிலப்பதிகாரபிள்ளைத்தமிழ் பாடல்கள்
5.திருநீலகண்ட நாயனார் சரிதப்பாடல்கள்

23."அலகுயாழ்" என அழைக்கப்படும் வாத்தியம்
1. கடம் 2. முகர்சிங் 3. கெஞ்சிரா
4. வீணை 5. கோட்டுவாத்தியம்

24. உத்சவபிரபந்தம் என்ற நூலை இயற்றியுள்ளார்
நவரத்தினமாலிகை கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்
துருவபதங்கள், கசல்கள் போன்றவற்றையும் இயற்றினார்
1813ஆம் ஆண்டு திருவாங்கூர் அரச குடும்பத்தில் பிறந்தார்
மேற்கூறிய கூற்றுக்களுடன் தொடர்புபட்ட வாக்கேயகாரர்

1. தியாகராஜசுவாமிகள் 2. ஸ்வாதித்திருநாள் மகாராஜா
3. சியாமசாஸ்திரிகள் 4. முத்துஸ்வாமிதீட்சிதர்
5. பைடாலகுருமூர்த்தி சாஸ்திரிகள்

25. ராம்தானு பாண்டே எனும் இயற்பெயரை உடைய வாக்கேயகாரர்
1. மொஸாட் 2. பீதோவன் 3. பாக் 4. தான்சேன் 5.பத்கண்டே

26 கர்நாடக சங்கீத பாடத்திட்டத்தில் வாத்தியங்களை இசைப்பதற்கான புதியதொரு தேர்ச்சி உள்ளடக்கபட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு.
1.2019 2.2018 3.2017 4.2020 5.2016

27. பாத்கண்டே எவ்வாத்தியம் வாசிப்பதில் திறமை பெற்றிருந்தார்
1. ஏக்தார் 2. தில்ருபா 3. புல்லாங்குழல்
4. ரபாப் 5.ஸிதார்

28. "ஹரிதும்ஹரோ" எனும் பாடலைப் பாடியவர்
1. M.L.வசந்தகுமாரி 2. M.S. சுப்புலட்சுமி 3. வீணைபாலச்சநதர்
4. திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை 5. பட்டம்மாள்

29. வர்ஜ இராகப்பிரிவுகளுள் கருடத்வனி இராகம்
1. ஷாடவ ஔடவம் 2. ஔடவசம்பூர்ணம் 3. சம்பூர்ண ஔடவம்
4. சம்பூர்ணஷாடவம் 5. ஷாடவ ஷாடவம்

30. திருப்பொன்னூஞ்சல் பாடப்படும் இராகம்
1. நீலாம்பரி 2. நாதநாமக்கிரியை 3. ஆரபி
4. பூபாளம் 5. மோகனம்

31. இலங்கையின் நாட்டுக்கூத்துமரபில் நாட்டுக்கூத்தினை குறுகிய நேரத்தில் மேடையேற்றும் வகையில் நவீனமயமாக்கியவர்
1. ரோசிரியர் சி.மௌனகுரு 2. பேராசிரியர். சு.வித்தியானந்தன்
3. சின்னத்தம்பிப் புலவர் 4. வீரமணிஜயர்
5. பூலோகசிங்கமுதலியார்

32. யாழ்ப்பாணராச்சியம் உருவாகிய நூற்றாண்டு.
1. 17ஆம் நூற்றாண்டு 2. 15ஆம் நூற்றாண்டு 3. 13ஆம் நூற்றாண்டு
4. 16ஆம் நூற்றாண்டு 5. 12 ம் நூற்றாண்டு

33. கீதகோவிந்தத்தினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
    1. சேர் எட்வின்    2. ஜெயதேவர்    3. அமிர்குஸ்ரு
    4. மெஸாட்    5.மொஸாட்

34. சங்கீதசுதாகரம் என்ற நூலின் ஆசிரியர்
    1. வெங்கடமகி    2. ஹரிபாலர்    3. சாரங்கதேவர்
    4. துளஜாமகாராஜா    5. கோவிந்தாச்சாரியார்

35. "இன்னம் என்மனம்" என்ற பதவர்ணம் அமைந்த இராகம்
    1. ஸாவேரி    2. சாருகேசி    3. ஸரஸாங்கி
    4. நாட்டைக்குறிஞ்சி    5. சண்முகப்ரியா

36. ஷட்மார்க்கங்களுள் ஒரு தாள அட்சரத்திற்கு 4 மாத்திரைகளையும் 16 ஸ்வரங்களையும் எடுத்துக்கொள்ளும் மார்க்கம்
    1.சித்திரதர மார்க்கம்    2. தட்சிண மார்க்கம்    3. சித்திர மார்க்கம்
    4.வார்த்திக மார்க்கம்    5. அர்த்தசித்திர மார்க்கம்

37. ஹிந்துஸ்தானி சங்கீதத்திலிருந்து கர்நாடக இசைக்கு வந்த தாளம்
    1. தேசாதி    2. தீப்சந்தி    3. திரிதால்
    4. ஜப்தால்    5. மத்யாதி

38. இந்திய சங்கீத லிபி முறை அழைக்கப்படுவது.
    1.ஸ்கிரிப்ட்நொடேஷன்    2. ஸ்டாவ் நொடேஷன்    3.நர்சுரல்
    4.ஸ்கேல்    5.நொடேஷன்

39. "சதுஸ்ருதி தைவதம்" மேலைத்தேய சங்கீதத்தில் குறிக்கப்படுவது.
    1. A    2. A flat    3. D    4. f Sharp    5. A Sharp

40. ஹிந்துஸ்தானி சங்கீதத்தை முதன்முதலாக ஸ்டாவ்நொடேஷன் முறையில் எழுதியவர்
    1. சேர்.சுரேந்திரமோஹனடாகூர்    2. சேர்.எட்வின்    3. சரபோஜிமகாராஜா
    4. பாலுஸ்வாமி தீட்சிதர்    5. பத்கண்டே

41. நாதம் எனும் பத்திரிகையை வெளியிட்டவர்
சிங்கப்பூர் மலேசிய வானொலிகளில் இசைக்கச்சேரி செய்தவர்
மருதனார் மடம் கலையகத்தினை அமைக்க முன்னின்று பாடுபட்டவர்
கானவாரிதி இசைப்புலவர் போன்ற பல பட்டங்களை பெற்றவர்

    1.S.உருத்திராபதி    2.P.சாம்பமூர்த்தி    3.N.சண்முகசுந்தரம்
    4.V.தட்சிணாமூர்த்தி    5.பிரம்மஸ்ரீ வீரமணிஐயர்

42. 12 அங்குலம் முதல் 15 அங்குலம் வரை நீளம் கொண்ட இசைக்கருவி
    1.ஸாரங்கி    2.ஸிதார்    3.ஸரோட்
    4.தபேலா    5.கோட்டுவாத்தியம்

43. ஜெயதேவரின் அஷ்டபதிகளைப் போலவே 24 அஷ்டபதிகளைத் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் தியாராஜஸ்வாமி மேல் இயற்றியவர்

1 P.சாம்பமூர்த்தி 2.ஷேத்ரக்ஞர் 3.வேங்கடமகி
4.கோவிந்தாச்சாரியார் 5.தியாகராஜஸ்வாமிகள்

44. "பைரவி இராகம்" பண்டை தமிழிசையில் அழைக்கப்படுவது

1.கௌசிகம் 2.புறநீர்மை 3.காந்தாரம்
4.பஞ்சமம் 5. கொல்லி

45. சரபோஜி மகாராஜா காலத்தில் கர்நாடக இசைக்கு அறிமுகமான வாத்தியம்

1.வயலின 2.ஓகன் 3. பியானோ
4.கிளாரினெட் 5.சாக்ஸபோன்

46. பியானோ வாத்தியத்தை முதன்முதலில் கண்டுபிடித்தவர்.

1.J.C.பாக் 2.துருபகோஷ் 3.அல்லாரக்கான்
4.பார்டோ லோமியா கிறிஸ்டோவோரி 5. மொஸாட்

47. ஜப்தால் எத்தனை மாத்திரைகளைக் கொண்டுள்ளது?

1. 16 மாத்திரைகள் 2. 6 மாத்திரைகள் 3. 14 மாத்திரைகள்
4. 10 மாத்திரைகள் 5. 8 மாத்திரைகள்

48. "மாதயை நிதி எனும்" என்ற சௌக்ககாலக் கீர்த்தனை அமைந்த இராகத்தின் தாய் இராகத்தின் மேள எண்

1. 15 2. 16 3. 17 4. 22 5. 18

49. 35 தாளங்களில் பதினொரு அட்சரங்களைக் கொண்ட தாளங்கள்

1. சதுஸ்ரஜாதி துருவதாளம், சதுஸ்ரஜாதி மட்டியதாளம், சதுஸ்ரஜாதி அடதாளம்
2. திஸ்ரஜாதி துருவதாளம், சங்கீர்ணஜாதி ரூபகதாளம், மிஸ்ரஜாதி திரிபுடைதாளம்
3. கண்டஜாதி மட்டியதாளம், மிஸ்ரஜாதி ரூபகதாளம், கண்டஜாதி ஜம்பைதாளம்
4. கண்டஜாதி அடதாளம், கண்டஜாதி ரூபகதாளம், கண்டஜாதி ஜம்பைதாளம்
5. சங்கீர்ணஜாதி மட்டியதாளம், சங்கீர்ணஜாதி ஜம்பைதாளம், சங்கீர்ணஜாதி திரிபுடைதாளம்

50. மாவை துரைசுவாமிக் குருக்கள் அவர்களால் தங்கநாதஸ்வரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

1. V.காமாட்சிசுந்தரம் 2. N.வீரமணிஜயர் 3. V.தட்சணாமூர்த்தி
4. S.உருத்திராதிபதி 5. ராஜரத்தினம்பிள்ளை